THE HINDU - ENGLISH
Dated: 30.10.2024

# Chennai district has 39.52 lakh voters after summary revision

The revision was carried out for 16 Assembly constituencies in the district, and will be effective from January 1, 2025, the qualifying date

**The Hindu Bureau**
CHENNAI

The draft voters' list for the 2025 special summary revision for Chennai district was published on Tuesday on the Ripon Buildings premises by the Additional District Election Officer and Deputy Commissioner (Revenue and Finance), M. Prithiviraj, in the presence of representatives of recognised political parties.

As per the Election Commission of India's (ECI) instructions, the revision was carried out for 16 Assembly constituencies in Chennai district, and will be effective from January 1, 2025, the qualifying date.

The draft list, now available at Greater Chennai Corporation's zonal offices and polling stations, includes 39.52 lakh voters – 19.41 lakh men, 20.09 lakh women, and 1,252 others.

Updates made in the revision added 53,359 new voters and removed 26,005 names. Among constituencies, the Harbour has the lowest voter count at 1.76 lakh, while Velachery has the highest at 3.12 lakh.



The draft electoral roll was released by M. Prithviraj, Additional District Election Officer and Deputy Commissioner (Revenue and Finance), on Tuesday. SPECIAL ARRANGEMENT

**Verification by Nov. 28**

Residents were requested to verify their names and details on the list by November 28, according to a press release.

Chennai district has 3,718 polling stations, with Perambur constituency having the most at 284 and Egmore the least at 169, the release added.

**Special camps**

Special camps for submitting Forms 6, 6A, 7, and 8 will be held on November 16, 17, 23, and 24 (Saturday and Sunday) at the respective polling stations.

The list is also accessible on the ECI's website (http://voters.eci.gov.in/) for applications related to new registrations, corrections, or deletions.

THE HINDU - ENGLISH

Dated: 30.10.2024

# Electorate of T.N. grows by about 4 lakh

**The Hindu Bureau**
CHENNAI

Tamil Nadu's electorate now stands at 6.27 crore, registering a growth of about four lakh electors. Women outnumber men in the electoral roll by over 11 lakh, according to the integrated draft electoral roll published by the Election Commission of India (ECI) on Tuesday.

As many as 8,964 electors are transpersons. The State's electorate was about 6.23 crore in April this year when it went to the Lok Sabha polls. The roll have been published at designated locations (mostly polling stations, which are in school buildings) in all the districts, and at https://bit.ly/4e01R0M

The Commission would conduct special campaigns on November 16, 17, 23 and 24 at these locations for inclusion, deletion, modification, or transposition of entries, and linking of Aadhaar with the Election Photo Identity Card (EPIC).

The highest electorate in the State is in the Sholinganallur Assembly constituency in Chengalpattu district at 6,76,133 electors – 3,38,183 men, 3,37,825 women, and 125 transpersons.

The Kilvelur Assembly constituency in Nagapattinam district has the lowest electorate, at 1,73,230 electors – 88,162 women, 85,065 men, and three transpersons.

DECCAN CHRONICLE
Dated: 30.10.2024

# TN HAS 6,27,30,588 VOTERS

DC CORRESPONDENT
CHENNAI, OCT 29:

Tamil Nadu has more women voters as 3,19,30,833 of its total electorate of 6,27,30,588 are women with the number of men standing at a lower level of 3,07,90,791 and Third Gender at 8,964.

The Special Summary Revision of Photo Electoral Rolls with January 1, 2025 as the qualifying date was announced on Tuesday even as the integrated draft rolls were published in all the Designated Locations (mostly polling stations in school buildings).

The Electoral rolls are also hosted in the CEO's website: https://www.elections.tn.gov.in and two Copies of the Rolls will be handed over to the recognized political parties by the District Election Officers.

The highest electorate in the State is in Sholinganallur Assembly Constituency in Chengalpattu district with 6,76,133 electors (Male: 3,38,183; Female: 3,37,825; Third Gender: 125) and Kilvelur Assembly Constituency in Nagapattinam district having the lowest with 1,73,230 electors (Male: 85,065; Female: 88,162; Third Gender 3)

TIMES OF INDIA
Dated: 30.10.2024

# 53,259 voters added to city's electoral rolls

TIMES NEWS NETWORK

**Chennai**: Greater Chennai Corporation released its latest revised draft electoral rolls on Tuesday, featuring 39,52,498 voters. A total of 53,359 voters were added after the latest revision, while 26,005 voters were removed.

Women voters, comprising 20,09,975, outnumbered male voters, who totalled 19,41,271.

Velachery has the highest number of voters within GCC limits, with 3,12,912 people, while Harbour has the least, with 1,76,197.

Male voters outnumbered women only in the Harbour constituency, which covers Sowcarpet and George Town, where there were 91,249 men compared to 84,883 women.

Female voters continue to grow in Tamil Nadu and outnumber their male counterparts by a margin of close to 12 lakh.

According to the integrated draft electoral roll published by the Election Commission of India on Tuesday, there are 6.27 crore voters in TN, out of which 3.19 crore are women and 3.07 crore are men. The number increased by four lakh compared to the previous list released in April, where it was 6.23 crore.

ECI is also holding special camps on Nov 16, 17, and Nov 23 and 24, in polling stations for inclusion, deletion, linking Aadhar with EPIC, modification, and transportation of entries in the electoral rolls.

D.T. NEXT.

Dated: 30.10.2024

# Among 6.27 cr electors, women outnumber men: EC

**CHENNAI: The State has a total of 6,27,30,588 voters as per the integrated draft electoral rolls of the Special Summary Revision of Photo Electoral Rolls 2025 published on Tuesday.**

Women voters make up 3,07,90,791, men account for 3,19,30,833, and there are 8,964 third-gender voters. Women voters outnumbered men by 11,40,042. Except in Krishnagiri, Dharmapuri, and Kallakurichi districts, women voters are higher in number than male voters in all districts.

Chief Electoral Officer Satyabrata Sahoo said in a statement that Sholinganallur constituency in Chengalpattu has the highest number of voters, with 6,76,133 electors, while Kilvelur constituency in Nagapattinam district has the lowest electorate, with 1,73,230 eligible to vote.

The ECI has also announced that special campaigns would be conducted on November 16, 17, 23 and 24 at the designated locations for those who missed out on the electoral list. Forms for inclusion, deletion, linking of Aadhaar with EPIC, modification and transposition of entries in the electoral rolls would be available in those centres.

During the claims and objection period, from October 29 to November 28, of the Special Summary Revision of Photo Electoral Roll 2025, an elector or an eligible citizen who wants to get enrolled or wants to make deletion, correction, or linking of Aadhaar with EPIC, transposition in an existing entry should submit form 6, 6B, 7 and 8 respectively along with necessary documents, the CEO said.

Online filing is also available by going to the websites http://voters.eci.gov.in and the Voter Helpline mobile app, the release said and added that persons completing 18 years on January 1, March 1, July 1 and October 1 in 2025 and persons names not included can apply for inclusion in Form 6.

As of November 28, 4.23 crore Aadhaar numbers of the electors in the State have been collected for linking with EPIC numbers. It accounts for 67.54% of the total voters in the State.

## City's 16 Assembly seats have 39 lakh voters, Velachery biggest

**CHENNAI: The Greater Chennai Corporation (GCC) released a draft voters list for Chennai on Tuesday. Velachery had the highest voter count of 3,12,912 and the lowest was 1,76,197 voters in Harbour.**

A total of 39,52,498 people were enrolled in the 16 Assembly constituencies in the capital city of Chennai. The number of women voters in the city stands at 20,09,975, surpassing men (19,41,271). There are 1,252 third-gender electors in the city as per the draft voters list released by the additional district election officer and deputy commissioner (Revenue and Finance) M Birathiviraj at Ripon Building on Tuesday.

The second highest enrolled were in Perambur 2,87,854, followed by Kolathur constituency which has 2,84,826 voters. After Harbour, Egmore and Royapuram have the lowest electoral count at 1,92,817 and 1,94,224 respectively.

As per the order of the Election Commission of India, the voter list is being revised on January 1, 2025, as the qualifying date for the year 2025. The mentioned draft voter list is available for the public at Chennai Corporation zonal offices – Tondiarpet (zone 4), Royapuram (zone 5), Thiru Vi Ka Nagar (zone 6), Anna Nagar (zone 8), Teynampet (zone 9), Kodambakkam (zone 10), Adyar (zone 13), and all polling centres. The EC requested the public to check whether their name is included in the draft voter list.

**3,718 polling stations are identified; Perambur has the highest with 284 and 169 booths at Egmore**

As many as 3,718 polling stations were identified in the city and based on it the voter list has been released today. The highest polling stations were at Perambur with 284 and the least number of them with 169 booths at Egmore. As per the voters' list released on March 27, 2024, the number of women voters are 19,95,484, men 19,28,461 and 1,199 third gender voters. The EC has added 53,359 voters and removed 26,005 voters, according to an official release.

Public can apply for additions, alterations at zonal offices at Chennai Corporation between October 29 and November 28. The GCC will set up special polling centres on Saturdays and Sundays - November 16, 17, 23 and 24.

DINA MALAR

Dated: 30.10.2024

# தமிழக வாக்காளர் 6.27 கோடியாக உயர்வு

**சென்னை, அக். 30–**

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி நேற்று துவங்கி, நவ., 28 வரை நடக்க உள்ளது. அனைத்து மாவட்டங்களிலும், சட்டசபை தொகுதி வாரியாக, வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி தமிழகத்தில் 6.27 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாஹூ வெளியிட்டு உள்ள அறிக்கை:

அடுத்த ஆண்டு ஜன., 1ம் தேதியை தகுதியேற்பு நாளாக வைத்து, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து ஓட்டுச்சாவடி களிலும், தேர்தல் கமிஷனின் **www.elections.tn.gov.in** என்ற இணையதளத்திலும், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழகத்தில் 6 கோடியே 27 லட்சத்து 30,588 வாக்காளர்கள் உள்ளனர். அதில், 3 கோடியே 7 லட்சத்து 90,791 பேர் ஆண்கள்; 3 கோடியே 19 லட்சத்து 30,833 பேர்பெண்கள்; 8,964 பேர் மூன்றாம் பாலினத்தவர்.



**சத்யபிரதா சாஹூ**

**தமிழகத்தில் வாக்காளர்கள்**
6.27 கோடி

**ஆண்கள்**
3.07 கோடி

**பெண்கள்**
3.19 கோடி

**மூன்றாம் பாலினம்**
8,964 பேர்

மாநிலத்தில் அதிக வாக்காளர்கள் உள்ள சட்டசபை தொகுதியாக, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சோழிங்கநல்லூர் உள்ளது. இத்தொகுதியில், 3.38 லட்சம் ஆண்கள், 3.37 லட்சம் பெண்கள், 125 மூன்றாம் பாலினத்தவர் என, மொத்தம் 6.27 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

மாநிலத்தில் குறைந்த வாக்காளர்கள் உள்ள தொகுதியாக, நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் தொகுதி உள்ளது. இங்கு, 85,065 ஆண்கள், 88,162 பெண்கள், 3 மூன்றாம் பாலினத்தவர் என, மொத்தம் 1.73 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

வாக்காளர் சிறப்பு முகாம் அடுத்த மாதம் 16, 17 மற்றும் 23, 24ம் தேதிகளில் நடக்க உள்ளது. இம்முகாமில், பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்ய, முகவரி மாற்ற, ஆதார் எண் இணைக்க விண்ணப்பிக்கலாம். மற்ற நாட்களில், ஓட்டுச்சாவடி அலுவலர், வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் விண்ணப்பம் அளிக்கலாம்.

இதுதவிர, **https://voters.eci.gov.in** என்ற இணையதளம் வழியாகவும், **'Voter help line'** என்ற மொபைல் போன் செயலி வழியாகவும் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

THE HINDU - TAMIL

Dated: 30.10.2024

வரைவு பட்டியல் வெளியீடு

# தமிழக வாக்காளர்கள் 6 கோடியே 27 லட்சம் பேர்

● சென்னை

தமிழகத்தில் 2025-ம் ஆண்டுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. இந்த பட்டியலில் 6 கோடியே 27 லட்சம் வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதுதொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: 2025 ஜனவரி மாதத்தை தகுதி நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதற்கேற்ப, அனைத்து மாவட்டங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல்களும் வெளியிடப்பட்டன. வரைவு வாக்காளர் பட்டியல்களை https://www.elections.tn.gov.in என்ற இணையதளத்திலும் காணலாம்.

மாவட்ட தேர்தல் அதிகாரிகளால், வாக்காளர் பட்டியலின் 2 நகல்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு வழங்கப்படும். 2025 வரைவு வாக்காளர் பட்டியலின்படி தமிழ்நாட்டில் தற்போது 6 கோடியே 27 லட்சத்து 30,588 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் ஆண்கள் 3 கோடியே 7 லட்சத்து 90,791 பேரும் பெண்கள் 3 கோடியே 19 லட்சத்து 30,833 பேரும் மூன்றாம் பாலினத்தவர் 8,964 பேரும் உள்ளனர்.

மாநிலத்திலேயே அதிகபட்ச வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவை தொகுதி சோழிங்கநல்லூர் ஆகும். இங்கு மொத்த வாக்காளர்கள் 6 லட்சத்து 76,133 பேர். ஆண்கள் 3 லட்சத்து 38,183 பேர், பெண்கள் 3 லட்சத்து 37,825 பேர், மூன்றாம் பாலினத்தவர் 125 பேர் உள்ளனர். குறைந்த வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவை தொகுதி கீழ்வேளூர் ஆகும். இங்கு மொத்தம் ஒரு லட்சத்து 73,230 பேர். அதில் ஆண்கள் 85,065, பெண்கள் 88,162, மூன்றாம் பாலினத்தவர் 3 பேர் உள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் வாக்குச்சாவடிகளில் நவ.16, 17, 23, 24 (சனி, ஞாயிறு) நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

THE HINDU - TAMIL
Dated: 30.10.2024

## காஞ்சி, செங்கை, திருவள்ளூர் மாவட்டங்களில்

# வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு

● காஞ்சி/செங்கை/திருவள்ளூர்

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர்கள் வெளியிட்டனர்.

காஞ்சிபுரம் ஆட்சியர் அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. ஆட்சியர் கலைச்செல்வி இந்த வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட, அதை மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், சார் ஆட்சியர் ஆஷிக் அலி, ஸ்ரீபெரும்புதூர் கோட்டாட்சியர் ஜ.சரவணக் கண்ணன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்த பட்டியலின்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஆலந்தூர், ஸ்ரீபெரும்புதூர் (தனி), காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய 4 சட்டப்பேரவை தொகுதிகளின் வாக்காளர்களின் எண்ணிக்கை 13,55,188. இதில் ஆண் வாக்காளர்கள் எண்ணிக்கை 6,58,818, பெண் வாக்காளர்கள் எண்ணிக்கை 6,96,153, இதர வாக்காளர்கள் எண்ணிக்கை 217.

செங்கல்பட்டு ஆட்சியர் அலுவலகத்தில் வரைவு வாக்காளர் பட்டியலை ஆட்சியர் ச.அருணராஜ் வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சுபா நந்தினி மற்றும் அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் பங்கேற்றனர்.

இந்த வரைவு வாக்காளர் பட்டியலின்படி செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சோழிங்கநல்லூர், தாம்பரம், மதுராந்தகம் (தனி) உள்ளிட்ட 7 சட்டப்பேரவை தொகுதிகளின் வாக்காளர்கள் எண்ணிக்கை 26,95,844. இதில், ஆண்கள் 13,33,858, பெண்கள் 13,61,508, இதரர் 478 பேர் உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரின் கீழ் உள்ள, ஆவடி, பொன்னேரி (தனி), திருத்தணி, மதுரவாயல் உள்ளிட்ட 10 சட்டப்பேரவை தொகுதிகளின் வரைவு வாக்காளர் பட்டியலை ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் பிரபுசங்கர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.

இந்த பட்டியலின்படி, 17,05,287 ஆண் வாக்காளர்கள், 17,52,462 பெண் வாக்காளர்கள், மூன்றாம் பாலின வாக்காளர்கள் 775 என, 34,58,524 வாக்காளர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளனர். இதில், அதிகபட்சமாக மாதவரம் தொகுதியில் 4,74,744 வாக்காளர்களும், குறைந்தபட்சமாக பொன்னேரி தொகுதியில் 2,62,680 வாக்காளர்களும் உள்ளனர். 3,699 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சத்யபிரசாத், வட்டாட்சியர் சோமு (தேர்தல்) பங்கேற்றனர்.

DAILY THANTHI Dated: 30.10.2024

**வரைவு பட்டியல் வெளியீடு**

## ஆண்களைவிட பெண்கள் அதிகம்

# தமிழ்நாட்டில் 6.27 கோடி வாக்காளர்கள்

## பெயர் சேர்க்க, திருத்தம் செய்ய 4 நாட்கள் சிறப்பு முகாம்

**தமிழகத்தில் நேற்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலின்படி 6 கோடியே 27 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்களைவிட பெண்களே அதிகம்பேர் உள்ளனர். பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தங்கள் செய்ய 4 நாட்கள் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது.**

சென்னை, அக்.30-

ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பட்டியல் திருத்தப்பட்டு வருகிறது. அதற்கு முன்பாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுவது வழக்கம்.

### வரைவு பட்டியல்

அந்த வகையில், வரும் ஜனவரி 1-ந் தேதியை, புதிய வாக்காளராக தகுதி ஏற்படுத்தும் நாளாக (18 வயது பூர்த்திக்கான நாள்) கொண்டு, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட உள்ளது. எனவே பழைய வாக்காளர் பட்டியல் திருத்தப்பட வேண்டும். அந்த திருத்தங்களை மேற்கொள்வதற்கு வசதியாக வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

தமிழகத்தில் தற்போதுள்ள வாக்காளர் பட்டியலின்படி, 3 கோடியே 6 லட்சத்து 2 ஆயிரத்து 367 ஆண்கள், 3 கோடியே 7 லட்சத்து 16 ஆயிரத்து 69 பெண்கள், 8,465 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 6 கோடியே 23 லட்சத்து 26 ஆயிரத்து 901 வாக்காளர்கள் உள்ளனர்.

### இணையதளத்தில்

வரைவு வாக்காளர் பட்டியல் குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தை மேற்கொள்ள இந்தியத் தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. அதைத்தொடர்ந்து 29-ந்தேதி (நேற்று) அனைத்து மாவட்டங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் உள்ள வாக்குச் சாவடிகளில் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் https://www.elections.tn.gov.in என்ற இணையதளத்திலும் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### 6.27 கோடி வாக்காளர்கள்

வாக்காளர் பட்டியலின் 2 நகல்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு மாவட்ட தேர்தல் அதிகாரிகள் வழங்குவார்கள்.

இந்த வரைவு வாக்காளர் பட்டியலின்படி தமிழ்நாட்டில் தற்போது 6 கோடியே 27 லட்சத்து 30 ஆயிரத்து 588 வாக்காளர்கள் உள்ளனர். அவர்களில் ஆண்கள் 3 கோடியே 7 லட்சத்து 90 ஆயிரத்து 791 பேர்; பெண்கள் 3 கோடியே 19 லட்சத்து 30 ஆயிரத்து 833 பேர்; மூன்றாம் பாலினத்தவர் 8,964 பேர்.

### பெரிய, சிறிய தொகுதி

மாநிலத்திலேயே அதிக அளவு வாக்காளர்களை கொண்ட சட்டமன்றத் தொகுதியாக செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது. அங்கு 6 லட்சத்து 76 ஆயிரத்து 133 வாக்காளர்கள். இவர்களில் ஆண்கள் 3 லட்சத்து 38 ஆயிரத்து 183 பேர்; பெண்கள் 3 லட்சத்து 37 ஆயிரத்து 825 பேர்; மூன்றாம் பாலினத்தவர் 125 பேர்.

குறைந்த அளவு வாக்காளர்களை கொண்ட சட்டமன்றத் தொகுதியான நாகை மாவட்டம் கீழ்வேளூரில் 1 லட்சத்து 73 ஆயிரத்து 230 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்கள் 85 ஆயிரத்து 65 பேர்; பெண்கள் 88 ஆயிரத்து 162 பேர்; மூன்றாம் பாலினத்தவர் 3 பேர்.

### விண்ணப்பங்கள்

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தப் பணிகள் 29.10.2024 முதல் 28.11.2024 வரை நடைபெறும். இந்த காலகட்டத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம், ஆதார் நம்பர் இணைப்பு போன்றவற்றை மேற்கொள்ள 6, 6பி, 7 அல்லது 8 ஆகிய விண்ணப்பப் படிவங்களை அளிக்க வேண்டும்.

அலுவலக வேலை நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலர், வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி

(2-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்க தொடர்ச்சி)

அலுவலகங்களில் விண்ணப்பங்களை அளிக்கலாம். அடுத்த மாதம் (நவம்பர்) 16, 17, 23, 24-ந் தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். தேவையான படிவங்கள் முகாம் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் கிடைக்கும். பூர்த்தி செய்த படிவங்களை அங்கேயே சமர்ப்பிக்கலாம். சிறப்பு முகாம் நாட்களில் அந்தந்த வாக்குச் சாவடிகளில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் அளிக்கலாம்.

### கூடுதல் ஆவணம்

பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முகவரிக்கான சான்றாக நீர் அல்லது மின்சாரம் அல்லது எரிவாயு இணைப்பு ரசீது (குறைந்தது 1 ஆண்டுக்கானது), ஆதார் அட்டை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி அல்லது அஞ்சல் அலுவலகத்தின் தற்போதைய கணக்கு புத்தகம், கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்), விவசாயி புத்தகம் உள்பட வருவாய்த் துறைகளின் நில உரிமைப் பதிவுகள், குத்தகைதாரராக இருந்தால் பதிவுசெய்யப்பட்ட வாடகை குத்தகை பத்திரம், சொந்த வீடு என்றால் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரம் ஆகியவற்றில் ஒன்றின் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.

வயதுச் சான்றாக சுய சான்றொப்பமிட்ட, உள்ளாட்சி அமைப்பு அல்லது நகராட்சி அதிகாரி அல்லது பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் வழங்கிய பிறப்பு சான்றிதழ், ஆதார் அட்டை, பான் அட்டை, ஓட்டுனர் உரிமம், சி.பி.எஸ்.இ. அல்லது ஐ.சி.எஸ்.இ. அல்லது மாநில கல்வி வாரியங்களால் வழங்கப்பட்ட 10-ம் வகுப்பு அல்லது 12-ம் வகுப்பு சான்றிதழ்கள் (பிறந்த தேதி இருந்தால்), இந்திய கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) ஆகிய ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலை அளிக்கலாம்.

25 வயதுக்குக் கீழுள்ள மனுதாரர்கள் வயதுச் சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். https://voters.eci.gov.in என்ற இணையதள முகவரி மற்றும் "வாக்காளர் உதவி" கைபேசி செயலி ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

### எந்தெந்த விண்ணப்பம்?

1.1.2025, 1.4.2025, 1.7.2025 மற்றும் 1.10.2025 ஆகிய தேதிகளில் 18 வயது பூர்த்தியடைபவர்களும், தற்போது வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும் தங்களின் பெயரை சேர்க்க படிவம் 6-ல் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் படிவத்தில் உள்ள உறுதிமொழியை பூர்த்தி செய்வது கட்டாயமாகும். வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் வாக்காளரின் புகைப்படங்களின் தரத்தை மேம்படுத்தும் விதமாக விண்ணப்பதாரர்கள் 200 டிபிஐ ரெசலூசன் கொண்ட புகைப்படங்களை அளிக்க வேண்டும்.

வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்க, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியிடம் 6ஏ படிவம் நேரில் அளிக்கப்பட வேண்டும். அல்லது, வாக்காளர் பதிவு அதிகாரிக்கு தபாலிலும் படிவத்தை அனுப்பலாம். வாக்காளர் பதிவு அதிகாரியிடம் 6ஏ படிவம் நேரில் அளிக்கப்படும்போது அதனுடன் புகைப்படம், விசா பற்றிய தகவல் அடங்கிய கடவுசீட்டின் தொடர்புடைய பக்கங்களின் நகலையும் சேர்த்து அளிக்க வேண்டும். வாக்காளர் பதிவு அதிகாரி, அசல் கடவுசீட்டை ஒப்பிட்டுச் சரிபார்த்து உடனடியாக திரும்பக் கொடுத்துவிடுவார். 6ஏ படிவத்தை தபாலில் அனுப்பும்போது, கடவுசீட்டின் நகல்கள் சுய சான்றொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும்.

### ஜனவரி மாதத்தில் இறுதிப் பட்டியல்

ஒரு வாக்காளர் தனது வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் நம்பரை இணைப்பதற்கு 6பி படிவத்தில் விண்ணப்பிக்கலாம். 28.10.2023 வரை, தமிழகத்தில் 4.23 கோடி ஆதார் எண்கள் (67.54 சதவீதம் எண்கள்) வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைப்பதற்காக சேகரிக்கப்பட்டுள்ளன. ஒருவரது பெயரை சேர்க்க ஆட்சேபனைக்கான விண்ணப்பப் படிவம் அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே உள்ள பெயரை நீக்கக் கோர வேண்டும் என்றால் 7-ம் படிவத்தை அளிக்க வேண்டும்.

வசிக்கும் இருப்பிடத்தை ஒரு தொகுதியில் இருந்து வேறு தொகுதிக்கு மாற்றினாலோ அல்லது தற்போது வசிக்கும் தொகுதிக்குள்ளேயே இடம்பெயர்ந்தாலோ அல்லது வாக்காளரின் விவரங்களில் திருத்தம் செய்ய வேண்டியதிருந்தாலோ அல்லது இடம் பெயர்தல், திருத்தம், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தொலைந்து போதல் ஆகிய காரணங்களுக்காக மாற்று புகைப்பட அடையாள அட்டை பெற வேண்டியிருந்தாலோ 8-ம் படிவத்தை விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த விண்ணப்பப் படிவங்களைப்பெற்று திருத்தங்களை மேற்கொண்டு இறுதி வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்படும். அந்தப் பட்டியல் வரும் ஜனவரி மாதம் வெளியிடப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பெண்கள் அதிகம்

வரைவு வாக்காளர் பட்டியலின்படி, ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கையைவிட பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 11 லட்சத்து 40 ஆயிரத்து 42 கூடுதலாக உள்ளது.

அதுபோல கடந்த மார்ச் மாதம் வெளியான வாக்காளர் பட்டியலில் உள்ள எண்ணிக்கையைவிட வரைவு வாக்காளர் பட்டியலில் 4.03 லட்சம் பேர் அதிகமாக உள்ளனர்.

DAILY THANTHI Dated: 30.10.2024

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு:

# சென்னையில் 39.52 லட்சம் வாக்காளர்கள்

## 53 ஆயிரம் பேர் சேர்ப்பு, 26 ஆயிரம் பேர் நீக்கம்

சென்னை, அக்.30-

சென்னையில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. மொத்தம் 39 லட்சத்து 52 ஆயிரத்து 498 வாக்காளர்கள் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

### வரைவு வாக்காளர் பட்டியல்

சென்னை மாநகராட்சிரிப்பன் மாளிகையில், சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான 2025-ம் ஆண்டின் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலை, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலரும், துணை கமிஷனருமான பிருதிவிராஜ் நேற்று வெளியிட்டார்.

இந்த கூட்டத்தில், தி.மு.க. சார்பில் சட்டத்துறைதுணை செயலாளர்கள் சந்துரு, மருதுகணேஷ், அ.தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர்கள் பாலகங்கா, ஆதிராஜாராம், பா.ஜனதா சார்பில் மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன், தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் சட்டப்பிரிவு அணி நிர்வாகிகள் சந்திரமோகன், நவாஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் கருணாநிதி, தே.மு.தி.க. முன்னாள் எம்.எல்.ஏ. நல்லதம்பி, ஆம் ஆத்மி வடசென்னை மாவட்ட தலைவர் பரூர் உள்பட பலர் பங்கேற்றனர்.

### வேளச்சேரி தொகுதியில்...

அப்போது, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன்படி, சென்னை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 718 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, அதன் அடிப்படையில் வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. ஏற்கனவே கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி, 39 லட்சத்து 25 ஆயிரத்து 114 வாக்காளர்கள் இருந்தனர். நடைபெற்று முடிந்த தொடர் திருத்தத்தில் 19 லட்சத்து 41 ஆயிரத்து 271 ஆண் வாக்காளர்களும், 20 லட்சத்து 9 ஆயிரத்து 975 பெண் வாக்காளர்களும், 1,252 இதர வாக்காளர்களும் உள்ளனர். மொத்தம் 39 லட்சத்து 52 ஆயிரத்து 498 வாக்காளர்கள் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

குறிப்பாக, 53 ஆயிரத்து 359 வாக்காளர்களின் பெயர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. 26 ஆயிரத்து 5 வாக்காளர்கள் பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், அதிகபட்சமாக வேளச்சேரி தொகுதியில் 3 லட்சத்து 12 ஆயிரத்து 912 வாக்காளர்களும், குறைந்தபட்சமாக துறைமுகம் தொகுதியில் 1 லட்சத்து 76 ஆயிரத்து 197 வாக்காளர்களும் உள்ளனர். மேலும், வரைவு வாக்காளர் பட்டியல் சென்னை மாநகராட்சி மண்டலங்கள் 4, 5, 6, 8, 9, 10, 13 மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும். பொதுமக்கள் தங்களது பெயர்கள் மற்றும் குடும்பத்தினரின் பெயர்கள் குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளனவா? இல்லையா? என்பதை சரிபார்த்து கொள்ள வேண்டும்.

### ஒரு மாதம் வரை விண்ணப்பிக்கலாம்

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் உள்ளவர்கள் மற்றும் அடுத்த ஆண்டு ஜனவரி 1-ந்தேதி 18 வயது பூர்த்தி அடைபவர்கள் படிவம் 6-ஐ பூர்த்தி செய்தும், பெயர்கள் நீக்கம் தொடர்பாக படிவம் 7-ஐ பூர்த்தி செய்யவும் வேண்டும். சட்டமன்றத் தொகுதிக்கு உள்ளே ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்த புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும், வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்களும் பெயர் சேர்க்க மற்றும் திருத்த படிவம் 8-ஐ பூர்த்தி செய்ய வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன், ஆதார் நகலினை இணைத்து சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் அல்லது சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலரின் அலுவலகத்தில் நவம்பர் 28-ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம். இதேபோல, பொதுமக்கள் *http://voters.eci.gov.in/* என்ற இணையதளம் மூலமாகவும், தங்களுடைய பெயர்கள் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள விண்ணப்பிக்கலாம். மேலும், நவம்பர் 16, 17, 23, 24 ஆகிய தேதிகளில் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

### அரசியல் கட்சியினர் புகார்

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட கூட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரதிநிதிகள் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலரிடம் பல்வேறு கேள்விகள் எழுப்பினார்கள். குறிப்பாக, இறந்தவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாமல் உள்ளது. மேலும், வாக்குரிமை உள்ளவர்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு உள்ளது. மேலும், வீடு வீடாக வாக்காளர் பட்டியல் பெயர் சேகரிக்க வரும் மாநகராட்சி ஊழியர்கள் சரியான முறையில் அனைத்து பகுதிகளுக்கு செல்லாமல் திரும்புகின்றனர். இதனால் பலர் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்தும் விடுபடுவதாக தெரிவித்தனர். 26 ஆயிரம் பேர் நீக்கப்பட்டதாக தெரிவிக்கின்றீர்கள். ஆனால் அதை விட கூடுதலாக வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

### மொத்த வாக்காளர்கள்

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | ஆண் | பெண் | 3-வது பாலினம் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் | 1,17,930 | 1,26,788 | 120 | 2,44,838 |
| 2. | பெரம்பூர் | 1,41,346 | 1,46,421 | 87 | 2,87,854 |
| 3. | கொளத்தூர் | 1,39,011 | 1,45,743 | 72 | 2,84,826 |
| 4. | வில்லிவாக்கம் | 1,17,827 | 1,22,564 | 62 | 2,40,453 |
| 5. | திரு.வி.க.நகர் | 1,06,203 | 1,12,445 | 70 | 2,18,718 |
| 6. | எழும்பூர் | 95,460 | 97,287 | 70 | 1,92,817 |
| 7. | ராயபுரம் | 94,888 | 99,264 | 72 | 1,94,224 |
| 8. | துறைமுகம் | 91,249 | 84,883 | 65 | 1,76,197 |
| 9. | சேப்பாக்கம் / திருவல்லிக்கேணி | 1,15,280 | 1,19,445 | 63 | 2,34,788 |
| 10. | ஆயிரம் விளக்கு | 1,15,155 | 1,20,588 | 110 | 2,35,853 |
| 11. | அண்ணா நகர் | 1,35,364 | 1,41,033 | 104 | 2,76,501 |
| 12. | விருகம்பாக்கம் | 1,40,256 | 1,41,903 | 93 | 2,82,252 |
| 13. | சைதாப்பேட்டை | 1,32,905 | 1,37,732 | 86 | 2,70,723 |
| 14. | தியாகராயநகர் | 1,15,084 | 1,18,307 | 50 | 2,33,441 |
| 15. | மயிலாப்பூர் | 1,28,912 | 1,37,142 | 47 | 2,66,101 |
| 16. | வேளச்சேரி | 1,54,401 | 1,58,430 | 81 | 3,12,912 |

DINAMALAR

Dated: 30.10.2024

# சென்னையில் 39.52 லட்சம் வாக்காளர்கள்

## வரைவு பட்டியல் வெளியீடு

சென்னை, அக். 30–

சென்னை மாவட்டத்தில், 16 சட்டசபை தொகுதிகளுக்கான சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பான வரைவு வாக்காளர் பட்டியலை, மாவட்ட தேர்தல் கூடுதல் அலுவலரும், துணை கமிஷனருமான பிருதிவிராஜ், ரிப்பன் மாளிகை வளாகத்தில், அரசியல் கட்சியினர் முன், நேற்று வெளியிட்டார்.

அதன்பின், துணை கமிஷனர் பிருதிவிராஜ் பேசியதாவது:

இந்திய தேர்தல் ஆணைய உத்தரவுப்படி, 16 சட்டசபை தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல், 2025 ஜன., 1ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு, சிறப்பு சுருக்கமுறை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்த பட்டியல், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், அடையாறு ஆகிய மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து ஓட்டுச்சாவடி மையங்களிலும், மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களது பெயர் குறித்த விபரங்கள், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பதை உறுதிப்படுத்தி கொள்ளலாம்.

சென்னை மாவட்டத்தில், 3,718 ஓட்டுச்சாவடிகள் அமைக்கப்பட்டு, அதன் அடிப்படையில், வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

அதிகபட்சமாக பெரம்பூர் தொகுதியில், 284 ஓட்டுச்சாவடிகள்; எழும்பூர் தொகுதியில், 169 ஓட்டுச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பட்டியலில் 25,628 ஆண்கள்; 27,669 பெண்கள்; 62 இதர வாக்காளர்கள் என, 53,359 வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். 12,818 ஆண்கள்; 13,178 பெண்கள்; 9 இதர வாக்காளர்கள் என, 26,005 வாக்காளர்களின் பெயர்களின் பெயர் நீக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இந்தாண்டு மார்ச் 27ல் வெளியிடப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை, 39 லட்சத்து, 25,144 பேர் இருந்தனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில், இறந்தவர்கள் பெயர்கள் நீக்கப்படவில்லை என, பா.ஜ., உள்ளிட்ட எதிர்கட்சியினர் குற்றம் சாட்டினர். மேலும், பெயர்கள் நீக்கத்தில் கவனமாக செயல்பட வேண்டும் என, அரசியல் கட்சியினர் கோரிக்கை வைத்துள்ளனர்.

**வரைவு பட்டியலில் வாக்காளர்கள் விபரம்**

**மொத்தம்:** 39,52,498

**புதிய வாக்காளர்கள்:** 53,359

**நீக்கப்பட்டோர்:** 26,005

**பெயர் சேர்க்க, திருத்தம் செய்ய**

**சிறப்பு முகாம்:** நவ., 16, 17, 23, 24ல் ஓட்டுச்சாவடி மையங்களில் ஏற்பாடு

**விண்ணப்பம்:** நவ., 28 கடைசி தேதி

**இணையதளம்:** http://voters.eci.gov.in

**சட்டசபை வாரியாக வாக்காளர்கள் விபரம்!**

| சட்டசபை தொகுதிகள் | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆர்.கே.நகர் | 1,17,930 | 1,26,788 | 120 | 2,44,838 |
| பெரம்பூர் | 1,41,346 | 1,46,421 | 87 | 2,87,854 |
| கொளத்தூர் | 1,39,011 | 1,45,743 | 72 | 2,84,826 |
| வில்லிவாக்கம் | 1,17,827 | 1,22,564 | 62 | 2,40,453 |
| திரு.வி.க.நகர் | 1,06,203 | 1,12,445 | 70 | 2,18,718 |
| எழும்பூர் | 95,460 | 97,287 | 70 | 1,92,817 |
| ராயபுரம் | 94,888 | 99,264 | 72 | 1,94,224 |
| துறைமுகம் | 91,249 | 84,883 | 65 | 1,76,197 |
| சேப்பாக்கம்/ திருவல்லிக்கேணி | 1,15,280 | 1,19,445 | 63 | 2,34,788 |
| ஆயிரம் விளக்கு | 1,15,155 | 1,20,588 | 110 | 2,35,853 |
| அண்ணாநகர் | 1,35,364 | 1,41,033 | 104 | 2,76,501 |
| விருகம்பாக்கம் | 1,40,256 | 1,41,903 | 93 | 2,82,252 |
| சைதாப்பேட்டை | 1,32,905 | 1,37,732 | 86 | 2,70,723 |
| தி.நகர் | 1,15,084 | 1,18,307 | 50 | 2,33,441 |
| மயிலாப்பூர் | 1,28,912 | 1,37,142 | 47 | 2,66,101 |
| வேளச்சேரி | 1,54,401 | 1,58,430 | 81 | 3,12,912 |
| **மொத்தம்** | **19,41,271** | **20,09,975** | **1,252** | **39,52,498** |